வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று பரிசீலிக்கப்பட்டதா? அதன் அடிப்படையில் நமக்கு கூடுதலாகத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இப்போதுதான் புள்ளி விவரங்கள் சேகரித்துக் கொண்டிருக் கிறார்கள். மத்திய அரசு வேலை முடிந்த பிறகுதான் இதற்குப் பதில் சொல்ல முடியும்.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகி, அரபிக் கடலிலே கலந்து வீணாகும் தண்ணீரை தமிழகத்திற்குக் கொண்டு வர தமிழ்நாட்டி லும் கேரளத்திலும் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்ததா? அண்மையில் மத்திய அரசு குழு ஆராய்ந்து ஒரு கணிசமான பகுதி தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்கும் என்று சொல்லியிருப்பதாக அறிகிறேன். அது பற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மூலக் கேள்வி ஒட்டு மொத்தமாக தென் மண்டல ஆறுகளைப் பற்றியது.

மணிமுத்தா அணைக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம்

*வினா எண் 517—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) சாத்தனூர் அணையின் வலது பக்கக் கால்வாய் மூலம் மணிமுத்தா அணைக்கு சாத்தனூர் அணை நீரை கொண்டு செல்ல திட்டம் உண்டா?

(ஆ) மணிமுத்தா அணையினால் பாதிக்கப்பட்ட மேமாத் தூர், விருத்தாசலம் அணைகளுக்கு அந்த நீர் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) மணிமுத்தா அணையினால் அதன் கீழ் உள்ள மேமாத் தூர், விருத்தாசலம் அணைகள் பாதிக்கப்படவில்லை. மணி முத்தா அணை, அதன் கீழ் உள்ள பழைய ஆயக்கட்டின் பாசன உரிமை பாதிக்கப்படாவண்ணமே திட்டமிடப்பட்டுக்கட்டப்பட் டுள்ளது.

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, அந்தப் பகுதி பாதிக்கப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் மூன்று அணைகள் அந்தப் பகுதி யிலே கட்டிமுடிக்கப்பட்டு விட்ட காரணத்தால் கீழே உள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு இதுவரை தண்ணீர் வரவில்லை. உபரித்

1981 மார்ச் 27]

தண்ணீர் தான் தருவோம் என்று சொல்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதிக்கு சாத்தனூர் டாம் வலது கரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, பொன்னியாற்றில் வெள்ளம் ஏற்படும் காலங்களிலும், திருக்கோவிலூர் அணைக்கட்டு மற்றும் எல்லிஸ்சத்திரம் அணைக்கட்டுகள் நிரம்பி வழியும் போது மட்டுமே, மணிமுத்தா நதியில் கடும் வறட்சி ஏற்படும்போது, சாத்தனூர் அணை நீரை இராமராஜபுரம் அணைக்கட்டுக்கு விடுவதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு அதைப்பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு திருத்திய மதிப்பீடுகள் தயாரித்து வேலைகள் நடைபெற அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10-00)

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தண்ணீர் விடுவதற்கான வேறு ஏதாவது உதவியைச் செய்வதற்குத் திட்டங்கள் உண்டா என்றுதான் கேட்டேன். ஆகவே மீண்டும் கேட்கிறேன். அந்தப் பகுதி மக்களுக்கு பாசனத்திற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு வேறு ஏதாவது திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவரவர்களே, மணிமுத்தா நதியில் கடும் வறட்சி ஏற்படும்போது சாத்தனூர் அணை நீரை இராமராஜபுரம் அணைக்கு கொடுப்பதற்குரிய ஒரு புதுத் திட்டத்திற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதைத் தான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன்.

மதுராந்தகம் ஏரியில் ஆக்கிரமிப்புகள்

*வினா எண் 518—**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஏரியின் உள்ளே சிலர் ஆக்கிரமித்து உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இந்தச் சட்ட விரோத ஆக்கிரமிப்பால் சுமார் 2,000 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஏரியின் நீர் பிடிப்பு புறம்போக்கு நிலங்களில் 129.69 ஏக்கர் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புக்களை அகற்ற பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) இந்த ஆக்கிரமிப்பால் ஏரியின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்கப்படவில்லை.